Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, APRIL 10, 2023

திங்கட்கிழமை, ஏப்ரல்,10 2023 | ஒளி: 08 கதிர்: 248 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

40 நிலையங்களுக்கு மீண்டும் அனுமதி

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர கியூஆர் கோட்டா முறைமைக்கு இணங்கத் தவறிய 40 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 12ஆம் திகதி முதல் எரிபொருள் விநியோகம் செய்யப்படும் என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

“வெடுக்குநாறியில் சிலைகளை நிறுவ யாருடைய அனுமதியும் தேவை இல்லை”

கனகராசா சரவணன்

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் ஆதிசிவன் கோவிலில் பிரச்சினை நடந்திருப்பது தவறு, அதனை சிங்கள அரகலய அல்லது தமிழ் அரகலய யார் செய்திருந்தாலும் தவறாகும் என தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கு சிலைகள் நிறுவப்படும். அதற்கு ஆளுநர் அல்லது பிரதமருடைய அனுமதியை பெறவேண்டிய அவசியமில்லை என்றார்.

மட்டக்களப்பு, மத்திய வீதியில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சிவானந்தன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்ற கட்சிக் காரியாலய திறப்பு விழாவில் கலந்துகொண்டதன் பின்னர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில், பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளை தனிப்பட்ட முறையில் அழைத்த போது ஒரு கட்சியை தவிர ஏனைய எதிர்க்கட்சிகள் தேர்தல் வேண்டாம் என்றனர். தேர்தலுக்கு எதிராக யாரும் செயற்படமாட்டர்கள்.

1990 ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலை புலிகள் எதிர்த்தனர். ஆனால், நாங்கள் இதன் ஊடாக பிரச்சினையை தீர்க்க முடியுமென தெரிவித்தோம் அதனையும் மறுத்து துரோகத்தனம் என்றனர்.

தொடர்ச்சி P2

புத்தாண்டு கொண்டாட ஜனாதிபதியே காரணம்

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டைக் கொண்டாடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே காரணம் என்றும் ஒரு கும்பலால் வங்குரோத்து செய்யப்பட்ட நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தூக்கி நிறுத்துகிறார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் எம்.பியுமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சீனா பங்கேற்பது நம்பிக்கை அறிகுறி

அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜேனட் யெல்லன் தெரிவிப்பு

இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பில் பங்கேற்பதில் சீனாவின் சில நகர்வுகளை பார்த்ததாகவும் சீனா பங்கேற்பது நம்பிக்கைக்குரிய அறிகுறி என்றும் அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜேனட் யெல்லன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக

ஊழல் ஒழிப்புச் சட்டத்தை கொண்டு வருவோம்

பயங்கரவாத தடுப்புச் சட்டமூலத்தை அன்றி ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தையே அரசாங்கம் துரிதமாக கொண்டு வர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயம்

இறுதி அறிக்கை பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படும்



உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக் குழுவின் இறுதி அறிக்கையை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் சமர்பிக்கவுள்ளதாக உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக் குழுவின் தவிசாளர்

தொடர்ச்சி P2

சின்னத் தேர்தல் நாளை ஆலோசனை

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து ஆலோசிப்பதற்காக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு, நாளை (11) செவ்வாய்க்கிழமை மீண்டும் கூடவுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நடைபெறும் என்று ஆணைக்குழு அறிவித்த போதும் வாக்குச் சீட்டு அச்சடிப்பதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் பணப்பற்றாக்குறை காரணமாக ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று ஆணைக்குழு மீண்டும் அறிவித்தது.

தொடர்ச்சி P2

கடந்தகால சூனிய அரசியல் மக்களை கையேந்த வைத்தது

வி.சுகிர்தகுமார்

கடந்தகால சூனிய அரசியல் மக்களை கையேந்தும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது என்று தெரிவித்த கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான கே.என். டக்ளஸ் தேவானந்தா, அதில் இருந்து மக்களை மீட்டெடுத்து சுயமாக கௌரவமாக வாழக்கூடிய எதிர்காலத்தை உருவாக்குவதே தனது நோக்கம் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இந்திய ஊசி மருந்து தொகுதிகளை

உடனடியாக நிறுத்தி வைக்குமாறு உத்தரவு

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 3 தொகுதி ஊசி மருந்துகளை உடனடியாக பயன்பாட்டில் இருந்து நிறுத்தி வைக்குமாறு இந்திய உற்பத்தியாளரின் இலங்கைப் பிரதிநிதி நிறுவனத்துக்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

ஹமில்டன் ரிசர்வ் வங்கி விவகாரம்

இலங்கை அரசாங்கத்தின் நகர்த்தல் மனு தள்ளுபடி

இறையாண்மைப் பத்திரங்கள் மற்றும் அவற்றுக்கான வட்டியைத் திருப்பிச் செலுத்தாததற்காக ஹமில்டன் ரிசர்வ் வங்கியால் தொடரப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்யுமாறு இலங்கை அரசாங்கம் தாக்கல் செய்த நகர்த்தல் மனுவை அமெரிக்காவில் உள்ள நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தொடர்ச்சி P2

ராஜபக்ஷர்களால் விமானத்தில்

உகண்டாவுக்கு கொண்டு சென்ற பணத்தை கொண்டு வாருங்கள்

ராஜபக்ஷர்கள் உகண்டாவுக்கு பணம் கொண்டு சென்றிருந்தால், ஜனாதிபதியும் அரசாங்கமும் தலையிட்டு பணத்தை அதே விமானங்களில் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு, அனுரகுமார திஸாநாயக்கவின் அல்லது சஜித் பிரேமதாஸவின் அரசாங்கம் வரும் வரை காத்திருக்கத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு பணத்தைக் கொண்டுவந்தால் சர்வதேச நாணய நிதியத்துக்கு பின்னால் சென்று அரச நிறுவனங்களை விற்பனை செய்யத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

காதலனுக்கு கைவிலங்கிட்டு காதலியை நிர்வாணமாக்கி பாலியல் துஷ்பிரயோகம்

காதலனுக்கு கைவிலங்கிட்டு அவரது காதலியை முழு நிர்வாணமாக்கி, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

3 மாத அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதிக்கு

6.5 பில். அமெ. டொலர்கள் கையிருப்பு வேண்டும்

இலங்கை, மூன்று மாதங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான தொகைக்கு சமமான 6.5 முதல் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்று நிதி நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

ஐ.ம.சவை அழிக்கும் சதியில் ஈடுபடுகிறது அரசாங்கம்

அரசாங்கத்தின் பலவீனங்கள், இயலாமைகள் மற்றும் ஆற்றாமைகளை மூடிமறைப்பதற்காக நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை அழிக்கும் சதியில் தற்போதைய அரசாங்கம் முழுமூச்சாக ஈடுபட்டுவருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வசந்தகால கூட்டத்தொடரில்

கலந்து கொள்கிறார் ஷெஹான் சேமசிங்க

உலக வங்கிக் குழும் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் 2023 வசந்த கால கூட்டங்களில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொள்ளவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அமெரிக்க தலைநகர் வொஷிங்டன் டிசியில் இன்று (10) முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள நிலையில் தனது பிரதிநிதித்துவம் குறித்து அமைச்சர், டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

"வெடுக்குநாறியில் சிலைகளை நிறுவ யாருடைய அனுமதியும் தேவை இல்லை"

இன்று என்ன நடந்தது தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டை சுடும் என்ற மாதிரி நடந்திருக்கின்றது நானும் 30 வருடமாக பாராளுமன்றத்தில் இருந்துவருவதால் எனக்கும் அங்கிருக்க கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களின் உள்ளும் புறமும் தெரியும் எனவே பொருத்தமான நிலையில் தேர்தல் வரும் உரிய நேரத்தில் தேர்தல் நடாத்தப்படும் என்றார்.

13 வது திருத்தச்சட்டமூலம் அமைக்கப்பட்ட மாகாணசபை முறைமை ஊடாகத்தான் பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம் என நீண்டகாலமாக நான் சொல்லி வருகின்றேன். அப்போது தமிழ்க்கட்சிகள், இயக்கங்கள் அதனை எதிர்த்ததன. ஆனால் இன்று அவர்களும் அதற்கு ஆதரவாக இருக்கின்றனர். அந்தவகையில் ஜனாதிபதி ஏற்கெனவே அதனை விளங்கியிருப்பதால் அதனை முன்வைத்துள்ளார் அது வரவேற்க கூடியது.

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் றோலர் படகுகளில் அத்துமீறி புகுந்து மீன்பிடிக்க அனுமதி வழங்கவில்லை இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெளிவாக தங்களுடைய கடற்தொழிலாளர்களின் நலன்களுக்கு புறம்பாக செயற்படாது என தெரிவித்துள்ளார்.

ஆகவே வீதிசட்டம் இருக்கின்றது அதனை மீறி நடக்கின்ற விடையங்களை கட்டுப்படுத்தப்படும் போது அது நெறிப்படுத்தப்படுகின்றது அது மாதிரி கடற் தொழிலுக்கும் ஒரு சட்டம் இருக்கின்றது அந்த சட்டங்களை மீறி நடக்கும் போது நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்றார்.

40 நிலையங்களுக்கு மீண்டும் அனுமதி

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் குறித்த எரிபொருள் நிலையங்களின் சேவைகளுக்கு ஒருவாரத்துக்கு மாத்திரம் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் 11 ஆம் திகதியுடன் வாரம் நிறைவடையவுள்ளதால் 12ஆம் திகதி முதல் எரிபொருள் முற்பதிவுகள் வழங்கப்படும் என்று தெரியவருகிறது.

குறித்த நிலையங்களின் சேவைகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, வியாழக்கிழமை (06) தெரிவித்திருந்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்ச்சியாக கியூஆர் கோட்டா முறைமை யை கடைப்பிடிக்கவில்லை என்று தெரிவித்த அமைச்சர், அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் குறைந்தபட்சம் 50 சதவீத எரிபொருள் தாங்கி கொள்ளளவை பராமரிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஏப்ரல் 15 ஆம் திகதிக்குள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான அனைத்து எரிபொருள் பௌசர்களுக்கும் ஜிபிஎஸ் கண்காணிப்பு அமைப்புகள் பொருத்தப்படும் என்றும் அதற்கு பின்னர், அனைத்து தனியார் பௌசர்களுக்கும் ஜிபிஎஸ் கண்காணிப்பு அமைப்பு பொருத்தப்படும் என்றார்.

புத்தாண்டு கொண்டாட ஜனாதிபதியே காரணம்

வஜிர எம்பி விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

சுதந்திரத்துக்கு பின்னர் நாடு பிளவுபட்டு பிரிந்தது என்றும் பல்வேறு சித்தாந்தங்களால் அது சரிந்துவிட்டது என்றும் குறிப்பிட்ட அவர், வங்குரோத்து அடைந்த நாட்டை ஜனாதிபதியே தூக்கி நிறுத்துவதாக சுட்டிக்காட்டினார்.

அதற்கு முழு இலங்கை மக்களும் ஆதரவளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்ட அவர், ஏனைய விடயங்களைச் செய்வதன் மூலம் வேலைத்திட்டத்தை எப்படியாவது சீர்குலைத்தால் அதற்கு அந்தக் குழுக்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றார்.

சீனா பங்கேற்பது நம்பிக்கை அறிகுறி

சில கடன் மறுசீரமைப்புகளில் சீனா விரைவாக செல்ல வேண்டும் என்று யெல்லன் முன்னர் கூறியிருந்த நிலையில், இந்தவாரம் ஆரம்பமாகவுள்ள சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வசந்த காலக் கூட்டங்களுக்கு முன்னரே யெல்லன் இந்த விடயத்தை ஏஃஎப்பி செய்தி சேவையிடம் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியாளர்கள், நிதி அமைச்சர்கள் மற்றும் 180க்கும் மேற்பட்ட உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் வொஷிங்டனில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிதாக உருவாக்கப்பட்ட உலகளாவிய இறையாண்மைக் கடன் வட்டமேசை இந்த வாரம் ஒன்று கூடும் போது அதன் முன்னிலையில் கலந்துரையாடல்கள் தொடரும் என்றும் யெல்லன் குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பின் முக்கிய கூறுகள் குறித்து தாங்கள் பயனுள்ள தொழில்நுட்ப கலந்துரையாடல்களை நடத்தி வருவதாக தெரிவித்த அவர், மறுசீரமைப்பில் சீனா பங்கேற்று வருவதாகவும் மேலதிக மேம்பாடுகளுக்காக நாங்கள் அனைவரும் சீனாவுக்கு அழுத்தம் கொடுப்போம் என்றார்.

கடன் மறுசீரமைப்புக்காக ஜி20 பொதுவான கட்டமைப்பின் வேகமான மற்றும் கணிக்கக்கூடிய செயல்பாட்டுக்கு வொஷிங்டன் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் என்று குறிப்பிட்டார்.

அடுத்த வாரம் இடம்பெறவுள்ள பங்குதாரர்களின் கூட்டங்களில் முக்கிய மாற்றங்கள் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளாவிய வளர்ச்சி குறைந்து வருவதால், கடுமையான கடன் சுமைகள் மற்றும் பலவீனமான முதலீட்டினால் உந்தப்பட்ட மந்தமான வளர்ச்சியை எதிர்கொள்ளும் ஏழைப் பொருளாதாரங்களுக்குக் கடினமாக அமையும் என்று உலக வங்கி முன்னரே எச்சரித்தது.

ாலநிலை மாற்றம் போன்ற உலகளாவிய சவால்களை மறுசீரமைக்கவும் சந்திக்கவும் கடன் வழங்குபவர்களின் உந்துதலுக்கு மத்தியில், உலக வங்கியின் பரிணாம வளர்ச்சி குறித்து விவாதத்தின் முக்கிய தலைப்பு இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

உலக வங்கிக் குழுமத்தின் மிகப்பெரிய பங்குதாரராக அமெரிக்கா உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊழல் ஒழிப்புச் சட்டத்தை கொண்டு வருவோம்

இதன் ஊடாக பன்டோரா பத்திரங்கள் ஊடாக அம்பலப்படுத்தப்பட்ட ஊழல்வாதிகள் மற்றும் கடந்த காலங்களில் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த முடியும் என்றும் குறிப்பிட்டார்.

இவ்வாறு குறித்த சட்டமூலத்தைக் கொண்டுவருவதன் மூலம் ஊழல்வாதிகளை உரிய முறையில் தண்டிக்க முடியும் என்றார்.

ஆனால் தற்போது அரசாங்கம் ஊழல்வாதிகளை பாதுகாக்கும் சட்டமூலத்தையே கொண்டுவர முனைவதாகவும் அதன் ஊடாக தமது உற்ற ஊழல்வாதி கூட்டாளிகளை அரசாங்கம் பாதுகாப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஹம்பாந்தோட்டை திஸ்ஸமஹாராம யடாலதிஸ்ஸ ஆரம்பப் பிரிவு பாடசாலையின் வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்களும் சனிக்கிழமை (08) வழங்கி வைக்கப்பட்டது.

அங்கு உரையாற்றி எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்ததாவது, இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஆங்கிலக் கல்வியுடன் தகவல் தொழில்நுட்பக் கல்வியும் வழங்கப்பட வேண்டும் எனவும், இதனூடாக இந்நாட்டின் பிள்ளைகள் அறிவுத்தகமை பெற்றவர்களாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இறுதி அறிக்கை பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படும்

அறிக்கை சமர்பிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் விசேட ஊடக சந்திப்பை நடத்தி பொதுமக்களை தெளிவூட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றங்களில் தற்போது 8 ஆயிரமாகக் காணப்படும் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை குறைப்பதே உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக் குழுவின் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணயத்துக்கான தேசிய குழுவொன்றை நியமித்திருந்தார்.

2022ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இந்த குழு நியமனம் குறித்து அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழுவின் தவிசாளராக முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டதுடன், வி. திஸாநாயக்க, எம்.எம்.ஆர்.அதிகாரி, கே.தவலிங்கம், ஐ.ஏ.ஹமீட் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உடனடியாக நிறுத்தி வைக்குமாறு உத்தரவு

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 3 தொகுதி ஊசி மருந்துகளை உடனடியாக பயன்பாட்டில் இருந்து நிறுத்தி வைக்குமாறு இந்திய உற்பத்தியாளரின் இலங்கைப் பிரதிநிதி நிறுவனத்துக்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை உத்தரவிட்டுள்ளது.

குறித்த ஊசி மருந்து தொகுதியின் விவரங்களை வழங்குமாறும் உற்பத்தியாளரின் பின்னணியை 28 நாட்களுக்குள் விளக்குமாறும் அதிகாரசபை உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் பேராதனை போதனா வைத்தியசாலையில் நோயாளிகளுக்கு பாதகமான எதிர்விளைவுகளை ஏற்படுத்திய சம்பவங்களைத் தொடர்ந்தே குறித்த மூன்று ஊசி மருந்து தொகுதிகளும் திரும்பப் பெறப்பட்டதாக அதிகாரசபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழக்கிழமையன்று வைத்தியசாலையில் பிரசவ மரணம் பதிவாகியுள்ளது என்றும் ஊசி போட்டதால் மரணம் ஏற்பட்டதாக உறுதி செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிசேரியன் அறுவை சிகிச்சைகளில் இந்த ஊசி மருந்து பயன்படுத்தப்பட்டதாகவும் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் பொது மக்களுக்கு ஆபத்தான மருந்துகளை வழங்கக் கூடாது என்று தெரிவித்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் டொக்டர் சம்மில் விஜேசிங்க இது ஒரு நல்ல தீர்மானம் என்றார்.

கடந்தகால சூனிய அரசியல் மக்களை கையேந்த வைத்தது

அம்பாறை மாவட்டத்தில் கடற்றொழில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் பொருட்டு மாவட்டத்துக்கான விஜயமொன்றை சனிக்கிழமை (08) மேற்கொண்டார்.

தம்பிலுவில் கனகரெட்ணம் கட்டடத்தில் சனிக்கிழமை (08) மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் கூறினார்.

மக்கள் சந்திப்பு நிகழ்வானது விவசாய போதனாசிரியரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் திருக்கோவில் பிரதேச இணைப்பாளர் மு.கங்காதரன் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்ட மக்களினால் அமைச்சரிடன் மகஜர்கள் கையளிக்கப்பட்டதுடன் பொது விடயங்கள் பற்றிய கலந்துரையாடலும் கட்சியின் எதிர்கால பயணம் நிகழ்வு வேலைதிட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பில், திருக்கோவில் பிரதேச ஆலயங்களின் நிருவாகத்தினர் சமுக சேவையாளர்கள் விவசாய சங்க உறுப்பினர்கள் பொது மக்கள் கட்சி உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்

காதலனுக்கு கைவிலங்கிட்டு...

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் சமனலவெவ பிரதேசத்தில் வியாழக்கிழமை (06) இடம்பெற்றுள்ளது. பொலிஸ் கான்ஸ்டபிள் சனிக்கிழமை (08) கைது செய்யப்பட்டுள்ளார்.

சமனலவெவவை பார்வையிடுவதற்காக அந்த காதல் ஜோடி, மோட்டார் சைக்கிளில் வந்துள்ளது. ஒரிடத்தில் நின்றிருந்த அந்த நபர், மோட்டார் சைக்கிளை நிறுத்தி, சோதனைக்கு உட்படுத்தவேண்டும் என கூறியுள்ளார்.

தான் பொலிஸ் அதிகாரி என்றும் போதைப்பொருள் இருக்கின்றதா? என்பது தொடர்பில் சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் கூறி பொலிஸ் அடையாள அட்டையை காண்பித்துள்ளார்.

இருவரையும் சோதனைக்கு உட்படுத்த வேண்டுமெனக்கூறி, மோட்டார் சைக்கிளுடன் அவ்விளைஞனுக்கு கைவிலங்கு இட்டுள்ளார். அதன்பின்னர், அந்த யுவதியை பற்றைக்காட்டுக்குள் இழுத்துச் சென்று முழு நிர்வாணமாக்கி, துஸ்பிரயோகம் செய்துள்ளார்.

அதன்பின்னர், தன்னுடைய கையடக்க தொலைபேசியில் அந்த 18 வயதான யுவதியை நிர்வாணமாக படம்பிடிக்க முயற்சித்துள்ளார். எனினும், அதற்கு அந்த யுவதி இடமளிக்கவில்லை என விசாரணைகளின் ஊடாக அறியமுடிந்துள்ளது.

சின்னத் தேர்தல் நாளை ஆலோசனை

எனினும், தற்போதுள்ள நிலவரப்படி ஏப்ரல் 25ஆம் திகதியன்று தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறாது என்று தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆணைக்குழு பல கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்திய ஆணைக்குழு, தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்ய மேலதிக நிதியை கோரிய நிலையில் திறைசேரியினால் சாதகமாக பதில் வழங்கப்படவில்லை.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. தேர்தல் தாமதம் தொடர்பில் பிரதமரும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தனவை இந்த வாரம் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு

இலங்கை அரசாங்கத்தின் நகர்த்தல் மனு தள்ளுபடி

நியூயார்க்கின் தெற்கு மாவட்ட நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்ட நிறுவனம் தாக்கல் செய்த நகர்த்தல் மனுவே நிராகரிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கம் உடனடியாக நிலுவைத் தொகையை செலுத்த வேண்டுமா என்பதை தீர்மானிப்பதற்காக வழக்கு தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இறையாண்மைப் பத்திரங்களின் பதிவுதாரர் செடே அன்ட் கோ என்பதால் ஹமில்டன் ரிசர்வ் வங்கிக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று இலங்கை அரசாங்கம் தனது மனுவில் குறிப்பிட்ட போதும், வங்கிக்கு அதிகாரம் இருப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

6.5 பில். அமெ. டொலர்கள் கையிருப்பு வேண்டும்

கையிருப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், துறை சார்ந்த வல்லுனர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றாலும் வெளிநாட்டு கையிருப்பை 6.5 பில்லியன் அமெரிக்க டொலரை விட அதிகமாக அதிகரிக்குமாறு அவர்கள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த ஆண்டு நிதி நெருக்கடியின் உச்சத்தில், இலங்கையின் கையிருப்பு சில நாட்களில் 5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் குறைவாக காணப்பட்டது.

அத்துடன், எரிபொருள் மற்றும் எரிவாயு போன்ற அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நிதியை வெளிடுவதற்கு இலங்கை மத்திய வங்கி போராடியது.

உகண்டாவுக்கு கொண்டு சென்ற பணத்தை கொண்டு வாருங்கள்

ராஜபக்ஷர்கள் உகண்டாவுக்கு பணம் கொண்டு சென்றிருந்தால், ஜனாதிபதியும் அரசாங்கமும் தலையிட்டு பணத்தை அதே விமானங்களில் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு, அனுரகுமார திஸாநாயக்கவின் அல்லது சஜித் பிரேமதாஸவின் அரசாங்கம் வரும் வரை காத்திருக்கத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு பணத்தைக் கொண்டுவந்தால் சர்வதேச நாணய நிதியத்துக்கு பின்னால் சென்று அரச நிறுவனங்களை விற்பனை செய்யத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இருந்து அண்ணளவாக 4 பில்லியன் டொலர் வெளியே செல்வதாகவும் அவை அரசாங்கத்தினால் அன்றி தனியார் மூலம் செல்வதாகவும் சுட்டிக்காட்டினார்.

கலந்து கொள்கிறார் ஷெஹான் சேமசிங்க

ஏப்ரல் 10ஆம் திகதி ஆரம்பமாகும் வசந்த கால கூட்டங்களில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு ஆவலுடன் காத்திருப்பதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடன் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் பொருளாதார மீட்சியை நோக்கி நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை மேலும் மேம்படுத்துவதற்கும் சர்வதேச பங்காளிகளுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.ம.சவை அழிக்கும் சதியில் ஈடுபடுகிறது அரசாங்கம்

ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாக பல்வேறுஊடகங்கள் ஊடாக பரவி வரும் செய்திகளுக்கு பதிலளிக்கும் வகையில் வெளியட்ட விசேட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான கலந்துரையாடல்கள் கட்சிக்குள்ளேயோ அல்லது கட்சிக்கு வெளியேயோ இடம்பெறவில்லை என்று தெரிவித்த அவர், கட்சியை பலவீனப்படுத்தும் விதமாக செயற்படும் நபர்கள் கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவுக்கு அழைக்கப்படுவர்கள் என்றார்.

பொய்களை திரும்ப திரும்ப கூறி ஐக்கிய மக்கள் சக்தி தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள தயாராகி வருவதாக வதந்திகள் பரப்பப்படுகின்றன என்றார்.

இரு வீடுகளை உடைத்து கொள்ளை

ஒருவர் கைது: இருவருக்கு வலை

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

இரு வீடுகளை உடைத்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களைத் கொள்ளையடித்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர்.

இச்சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடி மற்றும் நதியா கடற்கரை பிரதேசம் ஆகிய இடங்களில் சனிக்கிழமை (08) இடம்பெற்றிருப்பதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.றஹீம் தெரிவித்தார்.

மீன் பிடி இலாகா வீதியிலுள்ள வீடொன்றின் கதவை உடைத்து 4 பவுண் தங்க நகை 5 இலட்சம் ரூபாய் பணம் என்பவற்றையும் நதியா கடற்கரை பகுதியிலுள்ள தோட்டமொன்றிலுள்ள வீட்டுக் கூரையை உடைத்து உள்ளே இறங்கி மின்விசிறி மெராக்கள், தண்ணீர் ஹீற்றர், வானொலிப் பெட்டி உட்பட பல பொருட்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.றஹீம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் மேலும் இருவரைத் தேடிவருகின்றனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து மின்விசிறி மற்றும் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் உட்பட சில பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டவுள்ளதாக தெரிவித்த காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயத்தின் பழைய மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் பாடசாலையின் கூட்ட மண்டபத்தில் இப்தார் நிகழ்வு, அமைப்பின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம்.றியாஸின் நெறிப்படுத்தலில் அமைப்பின் தலைவர் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.சைபுடீன் தலைமையில் இடம்பெற்றது.

அதிபர்கள் கூடி கௌரவிப்பு

கல்முனை கல்வி வலய மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரி அதிபராக கடமையாற்றி கடந்த வெள்ளிக்கிழமை (07) ஓய்வு பெற்றுச்சென்ற எம். ஜே.ஏ.ஹஸீப் அவர்களை வீடு தேடி சென்று பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும், இப்தார் வைபகமும் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்ட கல்விப்பணிப்பாளருமான ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை கோட்ட கல்விப்பணிப்பாளரின் தலைமையில் நடைபெற்ற கோட்ட அதிபர்கள் ஒன்றுகூடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் ஒன்றான 2023 ம் ஆண்டிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்கின்ற அதிபர்களை கௌரவித்தலின் முதல் கட்டமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம். எஸ். சஹதுல் நஜீம் பிரதம அதிதியாகவும், நிர்வாக பிரதிக்கல்வி பணிப்பாளர் எம். எச்.எம். ஜாபீர், கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். மேலும் கல்முனை கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

பள்ளிவாசல் நிர்வாக தெரிவு கூட்டத்தில் கைகலப்பு

ஒருவர் பலி: மூவர் கைது

■ பாறுக் ஷிஹான்

பள்ளிவாசல் ஒன்றின் நிர்வாக தெரிவுக்கான ஆலோசனை கூட்டம் ஒன்றின் பின் இடம்பெற்ற சச்சரவில் ஒருவர் பலியானதுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை (7) மாலை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட செந்நெல் கிராமம் -2 பகுதியில் அமைந்துள்ள மஜ்ஜிதுல் முனீர் பள்ளிவாசல் முன்றலில் இடம்பெற்றுள்ளது.

இதன் போது குறித்த கூட்டத்தில் பங்குபற்றியவர்களில் சிலர் எதிர்வரும் நோன்பு பெரு நாள் முடிந்தவுடன் நிர்வாகத்தை தெரிவு செய்யுமாறு கோரியதுடன் மற்றுமொரு குழுவினர் சில தினங்களில் புதிய நிர்வாகம் தெரிவு செய்ய பட வேண்டுமென தெரிவித்திருந்தனர். இதனை அடுத்து எதிர்வரும் ஞாயற்றுக்கிழமை புதிய நிர்வாகத்தை தெரிவு செய்ய தீர்மானித்த நிலையில் குறித்த கூட்டம் நிறைவடைந்திருந்தது.

இந்நிலையில் கூட்டத்தை நிறைவு செய்து திரும்பியவர்கள் இரு குழுக்களாக பிரிந்த மோதலில் ஈடுபட்டதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் இம் மோதல் சம்பவத்தில் 65 வயது மதிக்கத்தக்க சம்மாந்துறை மலையடி கிராமம் கிராம சேவையாளர் பிரிவு 4 பகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் சம்பவ இடத்தில் தாக்குதலுக்கு உள்ளாகி பலியாகியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த சம்மாந்துறை பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை கைது செய்து மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

குருக்களிடம் கைவரிசை அடையாளம் காட்டவும்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, அரசடி சந்திப் பிள்ளையார் ஆலைய குருக்களின் அலைபேசி, 35 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் திறப்பு கோர்வை, ஆகிய திருடப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

வழமையைப் போல சனிக்கிழமை (08) ஆறு மணிக்கு பூஜைகளை முடித்துவிட்டு, 7 மணியளவில் அறைக்குச் சென்றுபார்த்தபோது, மேலே குறிப்பிட்ட பொருட்கள் காணாமல் போயிருந்தமையை அவதானித்துள்ளார்.

அதன்பின்னர், சிசிரிவி கமெரா காட்சிகளை ஆராய்ந்துள்ளார். அதில், இளைஞன் ஒருவன், முகத்தை மறைக்க முககவசம் அணிந்தவாறு அறையினுள் சென்று பொருட்களை திருடிக்கொண்டு வெளியேறியமை தொடர்பிலான காட்சிகள் பதிந்துள்ளன. அவைத்தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் குருக்கள் முறைப்பாடு செய்தார். இந்தத் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞனை அடையாளம் காட்டுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரியுள்ளனர்.

> “பூஜையை முடித்துக்கொண்டு அறைக்கு சென்று பார்த்தபோதே பொருட்கள் மாயமாகியிருந்தமையை கண்டுள்ளார். அதன்பின்னர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்

உயிர்ப்பு திருவிழா

“ஒளியைத் தர வேண்டும்”

ஆயர் மேதகு இம்மானுவேல் ஆண்டகை

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

எமது நாட்டில் மக்கள் பல துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அந்த துன்பங்களிலே இருளை காண்கின்றார்கள். ஆனால் இந்த உயிர்ப்பு திருவிழா அவர்களுக்கு ஒளியை தர வேண்டும். என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இயேசு நாதரின் உயிர்ப்புத் திருவிழா எம் அனைவருக்கும் ஒரு எதிர் நோக்கைத் தரும் விழாவாக இருக்கிறது. இயேசுநாதர் தனது வாழ்க்கையில் எத்தனையோ பேரை குணமாக்கினார் என்று அவர் விடுத்துள்ள உயிர்த்த ஞாயிறு செய்தியில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எத்தனையோ பேருக்கு உயிர் கொடுத்தார். பல்வேறு நோயினால் கஸ்டப்பட்டவர்களை அவர் குணமாக்கினார். ஆனால் அன்று அவரை சூழ இருந்த யூத மக்கள் அவர் ஒரு இரட்சகர்.

அவர் எமக்காக வந்த ஒரு மெசியா என்று பாராமல் அவரை பாடு படுத்தி, சிலுவையைத் தூக்கிச் சொல்லி இறுதியில் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். ஆனால் அவர் கூறியதன் படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

இதனை அவருடைய சீடர்கள் சாட்சிகளாக இருந்தபடியினால் அதனை அவர்கள் எழுதிக் கொடுத்துள்ளார்கள். இவ்வாறு இயேசு நாதருடைய உயிர்ப்பு விழா மற்றவர்களுக்கு ஒளி வீசும் விழாவாக இருக்கிறது என்றார்.

எமது நாட்டில் மக்கள் பல துன்பங்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அந்த துன்பங்களிலே இருளை காண்கின்றார்கள். ஆனால் இந்த உயிர்ப்பு திருவிழா அவர்களுக்கு ஒளியை தர வேண்டும். அவர்களை ஒளிர்விக்க வேண்டும். அவர்கள் நிம்மதியும், அமைதியும் காண வேண்டும் என்று நாங்கள் ஆசிக்கின்றோம்.

இயேசு நாதரின் சிறப்பான உயிர்ப்பு விழா ஊடாக மக்கள் துன்பங்களில் இருந்து விடுபட்டு அவர்கள் நல்ல ஒரு எதிர்காலத்தை தேடிப் போக உயிர்த்த ஆண்டவர் அவர்களுக்கு புது வாழ்வு அழிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திடீரென தீப்பற்றிய விடுதி

■ நிதர்சன் வினோத்

யாழ். கொழும்புத்துறை பிரதான வீதியில் சுண்டிக்குளி பகுதியிலுள்ள வீடொன்றில் இயங்கி வந்த தனியார் விருந்தினர் விடுதியில் எவருமற்ற நிலையில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்நிலையில், இது குறித்து யாழ் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மின்னொழுக்கே குறித்த தீர்வுக்கு காரணமென சந்தேகம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் சுமார் இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் தீயில் கருகி நாசமாகியுள்ளன. சனிக்கிழமை (08) இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா விற்ற பெண் கைது

■ செந்தூரன் பிரதீபன்

கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 28 வயதான குடும்பப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். புண்ணாலைக் கட்டுவன் பகுதியல 3 பிள்ளைகளின் தாயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 157 கிராம் கஞ்சா கைப்பெற்றப்பட்டது.

இவர் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நவக்கிரி பகுதியில் வைத்து ஒரு கிராம் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

இருவரும் அச்சுவேலி பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

14 வயது சிறுமி கூட்டு வன்புணர்வு

14 வயதான சிறுமியை கூட்டு வன்புணர்வுக்கு உள்படுத்தினர் என்றக் குற்றச்சாட்டின் கீழ் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர். யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிய 19 வயது முதல் 26 வயதுக்குட்பட்டவர்களே 14 வயதுச் சிறுமியை தொடர்ச்சியாக கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில்

சிறைச்சாலை நூலகம்

■ செந்தூரன் பிரதீபன்

“ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன” எனும் கூற்றுக்கு அமைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென நூலகம் ஒன்று சனிக்கிழமை (08) காலை 10 மணியளவில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவினால் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைகழகம் தனது கற்றல் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கு அப்பால் தான் சார்ந்த சமூகத்தின் மேம்பாட்டுக்காகச் சமூகப் பொறுப்பாண்மை மற்றும் சமூக வலுவூட்டல் செயற்பாடுகளில் அண்மைக் காலமாக ஈடுபாட்டு வருகின்ற நிலையில் பல்கலைக் கழகத்தின் சமூகப் பொறுப்பாண்மையின் ஒரு அம்சமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் தனது சமூக வலுவூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நூலக நியமங்களுக்கு ஏற்றவாறான 2,500 புத்தகங்களை கொண்ட நூலகம் யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் ஸ்ரீகாந்தலக்சுமி அருளானந்தம் சிவநேசன் குடும்பத்தினரால் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். பிரதேச செயலர் சுதர்சன், யாழ் சிறைச்சாலை அத்தியட்சகர் உதயகுமார, யாழ் சிறைச்சாலை ஜெயிலர் கெரத், யாழ் பல்கலைக்கழக உதவி நூலகர்கள், யாழ் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை மருத்துவர், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ,கைதிகள் என பலரும் கலந்து கொண்டன்ர.

இந்நூலகத்திற்கு தொடர்ச்சியாக இயங்குவதற்கான முழுமையான பங்களிப்பையும், பராமரிப்பு, ஆலோசனைகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போதைப் பொருளுடன் இரண்டு பேர் கைது

■ செந்தூரன் பிரதீபன்

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, யாழ்ப்பாணம் வைத்தியசாலை பின்புறம் உள்ள வீதியில் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களின் உடமையில் இருந்து 400 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் சனிக்கிழமை (08) மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் யாழ்ப்பாணம் 5 சந்திப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் 22 மற்றும் 24 வயதுடைய நபர்கள் என பொலிஸார் கூறினார்.

குறித்த நபர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சாமி வரம் கொடுத்தது; சாமிமலை பதுக்கியது

■ செ.தி.பெருமாள்

”சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி இன்னுமே வரம் கொடுக்கவில்லை” என பலரும் புலம்புவதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அதேபோலதான், பொருட்களின் விலைகளை அரசாங்கம் கொடுத்தாலும், வர்த்தகர்கள் இன்னுமே குறைக்கவில்லை என்றக் குற்றச்சாட்டு நிலவுகின்றது.

சமையல் எரிவாயுவின் விலை குறைந்துள்ளது. எனினும், மஸ்கெலியா, சாமிமலை நகரிலுள்ள மூன்று காஸ் நிறுவனங்களில் விலை குறைக்காமல் பழைய விலைக்கே விற்பனைச் செய்யப்படுகின்றன என காஸ் நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அந்த விற்பனை நிலையங்களில் பழைய விலைக்கே தற்போதும் விற்பனை செய்யப்படுவதாக அங்குள்ள நகர, கிராம மற்றும் பெருந்தோட்ட மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், ‘1927’ என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்துள்ளதாகவும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர். புத்தாண்டுக்கு ஆகக்கூடுதலான விலைக்கு காஸ் விற்பனைச் செய்யும் நோக்கிலேயே, இவ்வாறு பழைய விலைக்கு உரிய காஸ்களை பதுக்கி வைத்துக்கொள்வதுடன், விலை குறைந்த காஸ்களை அந்த மூன்று விற்பனை நிலையங்களைச் சேர்ந்தவர்களும் இன்னும் கொள்வனவு செய்யவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.

மேய்ந்த ஆட்டை திருடி இறைச்சியாக்கிய மூவர் கைது

■ ஆ.ரமேஸ்.

இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில் மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த ஆடுகளில் ஒன்றை ஆட்டையை போட்டு அதை வெட்டி இறைச்சாக்கி குறைந்த விலையில் விற்பணை செய்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ் மூவரை இராகலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இராகலை முதலாம் மாற்றுத்திரனாளி நபரொருவர் தனது குடும்ப வாழ்வாதாரத்துக்காக ஆடு வளர்ப்புத் தொழிலை சுயத்தொழிலாக செய்து வருகிறார்.

வழமைப்போல ஆடுகளை மேய்ச்சலுக்கு விடுவதைப் போல கடந்த வெள்ளிக்கிழமை (07) அன்றும் மேய்ச்சலுக்கு விட்டுள்ளார். பின் மாலை ஆடுகளை மந்தைக்கு அழைத்து சென்ற போது ஆடுகிளில் ஒன்று குறைந்துள்ளது.

அதேநேரத்தில் இராகலை பச்சத்தண்ணி மாரியம்மன் ஆலயம் அமைந்துள்ள தேயிலை மலையில் தோட்ட மக்களுக்கு குடி நீர் வழங்கும் பகுதிக்கு தண்ணீர் திறக்கச் சென்ற நபர் அவ்விடத்தில் இறைச்சிகளுடன் இரண்டு டியுலிப் கை பைகள் இருப்பதை அவதானித்து தோட்ட மக்களுக்கும் இராகலை பொலிஸாருக்கும் தகவல் வழங்கியுள்ளார்.

அதேநேரத்தில் காணாமற் போயுள்ள தனது ஆட்டை இறைச்சியாக்கியுள்ளதாக ஆட்டுக்கு சொந்தக்காரர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளதுடன் சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள், ஆடு மாடுகளை தொடர்ச்சியாக களவாடி அவைகளை இறைச்சிக்காக விற்பனைச் செய்து வருவதை தொழிலாக கொண்டுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன் சந்தேக நபர்களை விசாரணைகளின் பின் வலப்பனை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

45 லீற்றர் கசிப்பு சிக்கியது

■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா, மொக்கா தோட்ட கீழ் பிரிவில், ஞாயிற்றுக்கிழமை (09) காலை மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பு தேடுதலில், தோட்டக் குடியிருப்பு வீடொன்றில் இருந்து 45 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

45 லீற்றர் கசிப்பும் இரண்டு கேன்களில் அடைக்கப்பட்டிருந்தன. இருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்கு கிடைத்த தகவலை அடுத்தே இந்த சுற்றிவளைப்பு தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து கருவாடு கொண்டு வந்த பார ஊர்தி மூலம் கசிப்பு கொண்டுவரப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

கொங்கிறீட் சிலிப்பர்...

மலையகத்துக்கான ரயில் தண்டவாளத்தில் ஹட்டன் ரயில் நிலையத்துக்கு அண்மித்த பகுதியில், தண்டவாளங்களை புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. சேதமடைந்திருக்கும் சிலிப்பர் கட்டைகள் அகற்றப்பட்டு, கொங்கிறீட் சிலிப்பர்கள் போடப்படுகின்றன. (சுதத் எச்.எம்.ஹேவா)

11 தொழிலாளர்களை குளவிகள் கொட்டின

■ நடராஜா மலர்வேந்தன்

குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில், பசறை, கோணக்கலை தோட்ட லோவர் டிவிசன் தோட்ட பெண் தொழிலாளர்கள் 10 உட்பட 11 பேர் பசறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளர்.

தேயிலை மலையில் சனிக்கிழமை (09) கொழுந்து பறித்துக்கொண்டிருந்த வேளையில் குளவி கூடொன்று கலைந்து தொழிலாளர்களை குளவிகள் கொட்டியுள்ளன.

குளவிகொட்டுக்கு இலக்கான தொழிலாளர்களை காப்பாற்ற சென்ற இளைஞர் ஒருவரும் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளார். இவர்கள் தற்போது பசறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

“அவதானமாக இருங்கள்”

■ எஸ். கே. குமார்

உணவுகள் குறித்து அவதானமாக இருக்குமாறு நுவரெலியா மாநகரசபை பொது சுகாதார அதிகாரிகள், பொது மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

நுவரெலியா ஏப்ரல் வசந்த காலத்தை முன்னிட்டு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், தற்காலிக உணவுக் கடைகளிலும் சிற்றுண்டிசாலைகளிலும் உணவுகள் மற்றும் இனிப்பு பண்டங்களையும் உண்ணும் பொழுது அவை உரிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளனவா எனப் பார்த்து கொள்வனவு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

நுவரெலியாவுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிமானோர்கள் வருகை தருவதால் சந்தையில் தற்போது காலவதியான மற்றும் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் மிகவும் குறைந்த விலைகளில் விற்பனை செய்யக்கூடும். எனவே, பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் உணவு பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பாவனைக்கு உதவாத உணவு பொருட்கள் விற்பனை செய்வதை கண்டறிந்தால் 052-2222275 என்ற இலக்கத்தின் ஊடாக அறிவிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வசந்த காலத்தை முன்னிட்டு எதிர்வரும் 30.ஆம் திகதி வரை உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் உணவுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

திடீர் தேடுதல்

எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, நுகர்வோருக்கு நல்ல பொருட்களை விற்பனைச் செய்யவேண்டும் என்றவகையில், பொது சுகாதார அதிகாரிகள் தலவாக்கலை நகரில் சனிக்கிழமை (08) திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

கொட்டகலை பொது சுகாதார பரிசோதகர்கள் காரியாலயத்தின் அதிகாரிகளால் இந்த திடீர் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அத்தியாவசிய பொருட்கள் விற்பனைச் செய்யும் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள், உணவகங்கள் மற்றும் பேக்கரிகள் ஆகியன சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதர்ஷன் தலைமையிலான பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் தலவாக்கலை-லிந்துல நகர சபையின் பொது சுகாதார அதிகாரிகள் இணைந்தே இந்த தேடுதலை மேற்கொண்டனர்.

பயங்கரவாத சட்டமூலத்துக்கு எதிர்ப்பு

■ எம்.பிரபா

இலங்கையில் ஜனநாயகத்தை விரும்பும் அனைத்து தரப்பினரும் புதிய ‘பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வருவதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளர் சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

ஹட்டனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சட்டமூலம் பாராளுமன்றித்தில் நிறைவேற்றப்பட்டால் எதிர்காலத்தில் தொழிலாளர்கள் உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டங்களையும் எதனையும் முன்னெடுக்க முடியாது போகும் என்று தெரிவித்தார்.

தொழிற்சங்க வழி நடத்தலின் ஊடாக தொழிற்சங்க அங்கத்தவர்கள் தங்களின் சம்பளம், தொழில் போன்ற பிரச்சினைகளுக்கு ஆர்ப்பாட்டங்கள், கவனயீர்ப்பு போராட்டங்கள் மூலமாக வென்றெடுத்தனர்.

ஆனால், இந்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் காரணமாக எதிர்காலத்தில் தொழிலாளர்களின் கருத்து சுதந்திரம், போராட்ட சுதந்திரம், போன்ற ஜனநாயக ரீதியான போராட்ட வடிவங்களுக்கு தடையேற்படும் சூழல் உருவாகியுள்ளது என்றார்.

வருடாந்த திருவிழா

நுவரெலியா, கந்தப்பளை தேயிலைமலை தோட்ட ஸ்ரீ பாலதண்டாயுதபானி ஆலயம் மற்றும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா, ஞாயிற்றுக்கிழமை (09) காலை கரகம் ஊர்வலத்துடன் நிறைவு பெற்றது.

(ஆ.ரமேஸ்)

புத்தாண்டுக் கொண்டாட்டம்

■ சிவா ஸ்ரீதரரால்

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் இயங்கும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு இரத்தினபுரி விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை (06) இடம்பெற்றது.

சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த பெருந்திரளான முதியோர்களின் பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ பிரதம அதிதியாக கலந்துகொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

NUTRIE POOL சத்துணவு திட்டத்தில் சிறந்த பயனை பெற்றுக்கொள்ளவும்

■ ஆ.ரமேஸ்

பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடம் மற்றும் உடப்புஸ்ஸலாவை “ஏபர்நெட் லங்கா” ஆடை தொழிற்சாலை இணைந்து உடப்புஸ்ஸலாவை ஆடை தொழிற்சாலையில் ஆரம்பித்துள்ள (NUTRIE POOL) சத்துணவு பரிமாற்ற திட்டத்தின் ஊடாக ஆடை தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் சிறந்த பயனை தொடர்ந்தும் பெற்றுக்கொள்ள வேண்டுமென பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீட சிரேஸ்ட விரிவுரையாளர் அனுராத ஜயவீர தெரிவித்தார்.

ஏபர்நெட் லங்கா” ஆடை தொழிற்சாலை பிரதம முகாமையாளர் என்.எச்.சுதத் நாகசேனவின் தலைமையில் வெள்ளிக்கிழமை (07) இடம்பெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாடிய அவர் மேலும் தெரிவித்ததாவது.

இலங்கையில் போசணை குறைப்பட்டுக்கு உள்ளாகியுள்ள நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை பிரதேசத்தில் (NUTRIE POOL)திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனூடாக நோயற்ற, வலிமையான உடலுக்குத் தேவையான சக்தியை பெற்றுக்கொள்ள தேவையான விற்றமின்கள் அடங்கிய மரக்கறி மற்றும் பழ வகை உணவுகளை தொழிற்சாலை ஊழியர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

இந்த திட்டத்தின் முன்னேற்றத்துக்கு 18 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அவர்கள் முன்னெடுக்கும் பணியே இத்திட்டம் வெற்றியளிக்க துணையாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த சத்துணவு பரிமாற்ற திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்க தான் உதவுவதாக தெரிவித்த அவர் உணவு வங்கிக்கு மரக்கறி மற்றும் பழங்கள் அடங்களாக மேலும் உணவு பொருட்களை உடப்புசலாவை வர்த்தகர்களும் வழங்கி வருகின்றமை வரவேற்க கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தெளிவில்லாத அறிவித்தல்கள் தவிர்க்கப்பட வேண்டும்

நாட்டில் எரிபொருள் விநியோகத்தில் QR குறியீட்டு கோட்டா முறை பின்பற்றப்படுகின்றமை அனைவரும் அறிந்ததே. இந்த முறைமை கடந்த ஓகஸ்ட் மாதம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, முதன் முறையாக, தமிழ், சிங்கள புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வாராந்த கோட்டா அளவில் அதிகரிப்பை புதன்கிழமை (05) முதல் அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், இந்த கோட்டா முறையை பின்பற்றாத சுமார் 40 பெற்றோலியக்கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகம் தடை செய்யப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து, லங்கா ஐஓசி நிறுவனமும் தமது கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் 26 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்திருந்தது.

எனினும், இந்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எப்பகுதிகளைச் சேர்ந்தவை என்பது தொடர்பான விவரங்கள் எதனையும் எந்தத் தரப்பும் வெளியிட்டிருக்கவில்லை. இந்நிலையில், இவ்வாறு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகிக்காமையினால் பாதிப்பு ஏற்படுவது அவற்றை நுகரும் பொது மக்களுக்கே.

நகர் பகுதிகளில் குறிப்பிட்ட தூரங்களுக்கிடையே எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காணப்படுகின்றமை வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பல்களை மேற்கொள்ள வசதியாக அமைந்துள்ளன. ஆனாலும், கிராமப் பகுதிகளை எடுத்துக் கொண்டால், சில பகுதிகளில் சுமார் 10 கிலோமீற்றர்களுக்கு அதிகமாக பயணம் செய்து தமக்கு அவசியமான எரிபொருள் நிரப்பிக் கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் அவ்வாறான பகுதியில் காணப்பட்டால், அப்பகுதி மக்களுக்கு எவ்வாறு எரிபொருள் கிடைக்கும்? மேலும், அப்பகுதிகளில் பெருமளவில் காணப்படுவது மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் போன்ற சிறிய ரக வாகனங்களாகும். இவற்றுக்கு கடந்த புதன் கிழமை வரை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த கோட்டா அளவு, வாரத்துக்கு முறையே 4 மற்றும் 5 லீற்றர்களாகும்.

தமது வாழ்வாதாரத்தை இந்த வாகனங்களை நம்பி முன்னெடுப்போருக்கு, இந்த எரிபொருள் ஒதுக்கீடு எந்தளவுக்கு போதுமானதாக அமைந்திருக்கும் என்பது புரியாத புதிராக அமைந்திருந்தாலும், சிலர் கார், வேன் போன்ற வாகனங்களின் குறியீடுகளைப் பயன்படுத்தி இந்த சிறிய ரக வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பியிருந்தனர்.

அரசினால் வாடகை வாகனங்களுக்காக கோட்டா அளவு அதிகரிப்புக்காக பதிவு செய்து கொள்ளுமாறு ஆரம்பித்தில் அறிவித்திருந்த போதிலும், அந்தத் திட்டம் பெருமளவில் கைகூடியிருக்கவில்லை. இந்நிலையில், தற்போது இந்த தெளிவற்ற அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை உண்மையில் அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகத்தை இடைநிறுத்தியுள்ளமையையா அல்லது கோட்டா முறையை கண்டிப்பாக பின்பற்றுமாறு அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அச்சுறுத்துவதாக அமைந்துள்ளதா எனும் கேள்வியும் எழுந்துள்ளது. எனவே அரசாங்கமும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் இவ்வாறான தெளிவில்லாத அறிவிப்புகளை வெளியிடுவதை தவிர்க்க வேண்டும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

சந்தோஷங்கள் என்பன இரண்டு வகைகளில் வந்து சேர்வதாக அமைகின்றன. ஒன்று புறஉலகினூடாக வருவது. மற்றையது, தன்னுள் வியாபித்துப் பிரகாசிப்பது ஆகும்.

புற உலகில் எப்படிச் சந்தோஷங்களை அனுபவிக்கின்றோம் என்பதை ஆராய்வோம்? எம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள், இயற்கை வழங்கும் கொடைகளாகும்.

மனிதரை மட்டும் நோக்காது, பரந்த வானம், பச்சைப் பசேல் எனக் காணப்படும் விருட்சங்கள் காடுகள், மலைகள் இவற்றுடன் மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீரில் வாழ்வன என அனைத்தும் எம்மை அசத்தும் உயிரினங்களாகும். இறைவன் படைத்தவைகளை இரசித்தால் அதுவே, பேரின்பம் ஆகும்.

அடுத்து, தன்னுள் இருந்து பிரகாசிக்கும் களிப்பு, எப்படி முகிழ்கின்றது என்பதை விவரிக்க முடியாத, யோக நிலையாகும். மனப்பக்குவம் உள்ளோர், தமக்குள்ளே எல்லையற்ற பரம் பொருளூடாக, இதயத்துக்குள் சந்தோஷத்தை அனுபவித்த வண்ணம் இருக்கின்றார்கள்

கோபம், குரோதம், பொறாமை இல்லாமல், மனதை நிர்மலமாக்கினால், அகத்துக்குள் இறைவனை நிறுத்திப் பேரானந்தம் பெறலாம். இது நிச்சயமானது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

அடுத்து ஜனாதிபதித் தேர்தல்?

என்.கே.அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்து நடத்து என்று கதறிக்கொண்டிருந்த எதிர்க்கட்சிகளெல்லாம், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான நீட்டிக்கப்பட்ட நிதி வசதியை அங்கீகரித்ததன் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பற்றிப் பேசுவதைக் குறைத்துக்கொண்டன.

இலங்கையின் பெற்றோலியச் சந்தைக்குள் போட்டியை ஊக்குவிப்பதற்காக ஏனைய போட்டியாளர்களை உள்ளீர்க்க அமைச்சரவை எடுத்துக்கொண்ட தீர்மானத்தினை எதிர்த்து, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் முன்னெடுத்த வேலைநிறுத்தமும் படுதோல்வியில் முடிந்திருக்கிறது.

எரிபொருள் விலை கணிசமாகக் குறைக்கப்பட்டது. எரிவாயு விலையும் ஆயிரம் ரூபாயால் குறைக்கப்பட்டது. தொடர்ந்தும் விலைவாசி கொஞ்சம் குறையும் என்ற எதிர்பார்ப்பும் மக்களிடையே உருவாகியுள்ளது. தான் ஏற்ற பணியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ குறிப்பிடத்தக்க அளவு நிறைவேற்றியுள்ளார் என்ற நம்பிக்கை பொதுமக்களிடம் துளிர்விடத் தொடங்கியிருக்கிறது. அதனாலோ என்னவோ ஒரு மாதம் முன்புவரை கூட, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்து நடாத்து என்று தலைகீழாக நின்ற எதிர்க்கட்சிகள் தற்போது கள்ள மௌனம் சாதிக்கின்றன.

அரசியல் யதார்த்தம் அவர்களுக்கும் விளங்கியிருக்கும். அதுபோல, ரணில் விக்ரமசிங்ஹ என்ற அரசியல் சாணக்கியன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்துவதில் அக்கறையற்றிருந்ததற்கும், ஐ.எம்.எஃப் உதவி கிடைத்தபின் களநிலவரங்கள் மாறும் என்ற கணிப்பும் முக்கியமானதாக இருந்திருக்கும். தற்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ பக்கமாகக் காற்றடிக்கத் தொடங்கியுள்ளது. இதனால், சஜித் பிரேமதாஸ பக்கத்திலுள்ள பலரும் ரணில் விக்ரமசிங்ஹ பக்கம் தாவுவதற்கு சமயம் பார்த்துக்கொண்டிருப்பதான கருத்துக்கள் பரவலாகப் பதியப்படுகின்றன.

இலங்கை அரசியலில் கட்சி தாவுதல் என்பது, குரங்கு கொப்பு விட்டு கொப்பு தாவுவதைப் போன்றது. ஆகவே சமகி ஜன பல வேகயவினர், சஜித் என்ற காய்ந்துபோன கொப்பிலிருந்து, ரணில் என்ற ஆலமரத்திற்கு தாவ விரும்புகிறார்கள் என்ற செய்தியில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஆனால் அந்தத் தாவலும், ஆதரவும் இந்த சந்தர்ப்பத்தில் ரணில் விக்ரமசிங்ஹவிற்குத் தேவையா என்பதுதான் முக்கிய கேள்வி.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹவைப் பொறுத்தவரையில், பொருளாதார மீட்சித் திட்டங்கள்தான் முன்னுரிமையுடைய தேவையாக இருக்கின்றன என்பதை அவர் உணர்ந்திருக்கிறார். அதன்படி, அந்தத் திட்டங்களுக்கு உயிர் கொடுப்பதற்கு தேவையான பாராளுமன்றப் பெரும்பான்மை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுணவின் ஆதரவில் ஜனாதிபதி ரணிலுக்கு உண்டு. ஆகவே அதற்காக சமகி ஜன பலவேகய ஆட்களை பதவிகொடுத்து கட்சிதாவச் செய்ய வேண்டிய அத்தியாவசிய நிலையில் அவர் இல்லை.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியை மீட்டெடுக்க வேண்டும் என்ற அவருடைய தனிப்பட்ட விருப்பத்திற்கு, ஐ.தே.க-விலிருந்து விலகியவர்களை மீண்டும் கொண்டு வருவது பற்றி அவர் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர் ஐ.தே.க-விலிருந்து தன்னை தற்போது சற்றே தூரமாக வைத்திருந்தாலும், அவர்தான் இன்னமும் ஐ.தே.க தலைவர்.

இந்த இடத்தில் தான் அடுத்த தேர்தல் பற்றிய கேள்வி எழுகிறது. ஜனாதிபதியால் தற்போது பாராளுமன்றத்தைக் கலைத்து பாராளுமன்றத் தேர்தலை நடத்த முடியும், அல்லது ஜனாதிபதித் தேர்தலுக்குப் போக முடியும். இதில் எதை ஜனாதிபதி ரணில் செய்யப்போகிறார் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. ஜனாதிபதி ரணில் ஆதரவளிக்கும் கட்சி அல்லது தரப்பின் வேட்பாளர்கள் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறுவதைவிட, ஜனாதிபதித் தேர்தலொன்று தற்போது நடந்தால் ரணில் விக்ரமசிங்ஹ வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன.

> **ராஜபக்ஷக்கள் எங்கு இருக்கிறார்களோ, அங்கு சிறுபான்மையினரின் வாக்குகள் இருப்பதில்லை என்பதுதான் இலங்கை தேர்தல் நியதி! ஆகவே இந்த விடயத்தில் சிறுபான்மையினருக்கு நம்பிக்கையளிக்க வேண்டிய கட்டாயத்தில் ஜனாதிபதி ரணில் இருக்கிறார்.**

தற்போதைய சூழலின் கீழ், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண ஜனாதிபதி ரணிலை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கும் என்று தெரிகிறது. அப்படியானால் அவர்கள் ஒரு போட்டியாளரை நிறுத்தப் போவதில்லை. சஜித் பிரேமதாஸ, ரணில் விக்ரமசிங்ஹவை எதிர்த்து இன்றைய சூழலில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா என்பது கேள்விக்குறியே. ஓரளவேனும் தந்திரோபாயமாகச் சிந்தித்தால் அவர் அதனை தவிர்ப்பார். ஆனால் உணர்ச்சி வசப்பட்டு சிந்தித்தால், அவர் போட்டியிடக் கூடும். மறுபுறத்தில், ஜே.வி.பி தனது தற்போதைய முகமூடியான என்.பி.பி-யின் கீழ் அநுரகுமார திசாநாயக்க போட்டியிடக் கூடும், அதுபோல "ஹெலிகொப்டரில்" மைத்திரி பாலவோ, டளஸோ போட்டியிடக்கூடும்.

> **தொல்பொருள் திணைக்களமென்ற பெயரில் பேரினவாத சக்திகளின் அட்டகாசம் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் அடையாளங்களைச் சிதைத்துக்கொண்டிருப்பதை தமிழ் மக்கள் சினத்தோடும், கடும் விசனத்தோடும் எதிர்கொள்கிறார்கள்.**

இந்தக் களத்தில் எதிர்த்தரப்பு பிளவடைந்திருக்கிறது. அவர்களிடையே ஒற்றுமையை உருவாக்குவது என்பது மிகக்கடினமான காரியம். ரணில் விக்ரமசிங்ஹ என்ற அரசியல் சாணக்கியன் இருந்ததால் தான் 2015-ல் எதிர்க்கட்சியின் பிரதான வேட்பாளர் என்ற திரண்ட ஆதரவுத்தளத்தில் போட்டியிட்டு மைத்திரி பாலவினால், மஹிந்தவை எதிர்த்து வென்று ஜனாதிபதியாக முடிந்தது.

ஒருவேளை அந்தத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பிரிந்து நின்றிருந்தால், அந்த வெற்றி சாத்தியமாகியிருக்காது. இதில் ஜே.வி.பி-கூட தன்னுடைய வேட்பாளரை இறக்காது, கூட்டணிக்கு வெளியில் நின்று மைத்திரி பாலவை ஆதரித்திருந்தது. இன்றைய சூழலில் இதுபோன்றதொரு பொதுவேட்பாளர் இறக்கப்பட்டு, அவரை அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆதரிக்குமா என்பது கேள்விக்குறியே!

சஜித் போட்டியிட்டால், அவரை கூட ஆதரிக்குமா என்பதும் கேள்விக்குறியே. அல்லது வேறு ஒருவர் பொதுவேட்பாளராகும் போது, அவரை வெல்ல வைக்க சஜித் ஆதரிப்பாரா என்பதும் கேள்விக்குறியே! ஆகவே இந்தக் கணக்குகளைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹவைப் பொறுத்தவரையில் அடுத்து பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவதைவிட, ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்வதுதான் ஒப்பீட்டளவில் சாதகமானதான இருக்கும்.

இதைச் செல்வதால், ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றி உறுதி என்று சொல்வதாக அர்த்தமில்லை. ஒருவேளை எதிர்க்கட்சிகள் ஒன்றுதிரண்டு ஒரு பொதுவேட்பாளரை ஆதரித்தால் அது சாத்தியம். இன்றைய எதிர்க்கட்சிகளின் இயக்குகரமாக இருக்கும் வெளிநாட்டு தூதுவராலய சக்திகளின் அழுத்தத்தின் பெயரில் அப்படியொரு தேர்தல் கூட்டு சாத்தியமானாலும் அதிசயமில்லை. அப்படியொரு நிலையின் கீழ் ஒரு "தரமான" பொதுவேட்பாளர் இறக்கப்பட்டால், ரணில் விக்ரமசிங்ஹ கணிசமான சவாலை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இந்த இடத்தில்தான் மறுபடியும், இலங்கையின் சிறுபான்மையினரின் வாக்குகள் முக்கியத்துவம் மிக்கனவாக மாறுகின்றன. சிறுபான்மையினர் ரணிலை ஆதரிப்பார்கள் என்ற எடுகோள், இம்முறை கொஞ்சம் சவாலுக்குட்படும்! ஏனென்றால் இம்முறை ரணிலை, ராஜபக்ஷக்கள் எதிர்க்கவில்லை, ஆதரிக்கிறார்கள். ராஜபக்ஷக்கள் எங்கு இருக்கிறார்களோ, அங்கு சிறுபான்மையினரின் வாக்குகள் இருப்பதில்லை என்பதுதான் இலங்கை தேர்தல் நியதி! ஆகவே இந்த விடயத்தில் சிறுபான்மையினருக்கு நம்பிக்கையளிக்க வேண்டிய கட்டாயத்தில் ஜனாதிபதி ரணில் இருக்கிறார்.

அது அவ்வளவு இலகுவானாதாக இருக்கப் போவதில்லை. 2023 பெப்ரவரி 4, சுதந்திர தினத்திற்கு முன் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கு என்று சொன்னவர் ரணில் விக்ரமசிங்ஹ, ஆனால் பெப்ரவரி போய், மார்ச் போய், ஏப்ரலும் வந்துவிட்டது, ஆனால் தீர்வு பற்றியோ, ஏன், குறைந்தபட்சம் 13ம் திருத்தத்தின் முழுமையான அமுல்ப்படுத்தல் பற்றியோ எந்தக் கதையுமே இல்லை. மறுபுறத்தில், தொல்பொருள்திணைக்களமென்ற பெயரில் பேரினவாத சக்திகளின் அட்டகாசம் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் அடையாளங்களைச் சிதைத்துக்கொண்டிருப்பதை தமிழ் மக்கள் சினத்தோடும், கடும் விசனத்தோடும் எதிர்கொள்கிறார்கள். இதுவெல்லாம் சிறுபான்மையினர் வாக்குகளை அந்நியமாக்கும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ விரைவில் புரிந்துகொள்வது நல்லது.

இல்லையென்றால், 2005 மீண்டும் நடக்கலாம். ஆகவே ஜனாதிபதி ரணில் இதுபற்றியும் கரிசனம் கொள்வது அவசியம். தமிழ் அரசியல் கட்சிகள், இந்த முறை பலமான பேரமொன்றில் ஜனாதிபதி ரணிலுடன் ஈடுபட வேண்டியது அவசியம். நூறு கோடி ரூபாய்க்கான பேரமல்ல. மாறாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பான பேரத்தில் ஈடுபட வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே சில உறுதிமொழிகளை மட்டுமல்ல, சில நிபந்தனைகளையும் நிறைவேற்றிக்கொண்டபின் ஆதரவு என்ற நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

2024ன் இறுதிப்பகுதியில் நடக்க வேண்டிய ஜனாதிபதித் தேர்தல், 2024ன் ஆரம்பப் பகுதியில், அல்லது நடுப்பகுதியில் நடக்கலாம் என்பதுதான் இப்போதைய எதிர்பார்ப்பு. ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு அடுத்த சில மாதங்களில் பாராளுமன்றத் தேர்தலும் நடத்தப்படலாம். எது எவ்வாறாயினும், 2024-2025 தேர்தல் ஆண்டுகளாகவே இருக்கப் போகின்றன. அதற்கான முஸ்தீபுகள் ஆரம்பமாகிவிட்டன.

கடிதங்கள்

பகலில் ஒளிரும் வீதி விளக்குகள்

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக பந்தமேந்தி ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இன்னும் சிலர் மின் பாவனையைக் குறைத்துக்கொள்கின்றனர். அதுமட்டுமன்றி, தேவையில்லாத மின்குமிழ்களை அணைத்துவிடுகின்றனர். எனினும், ஒவ்வொரு மாத மின்கட்டண பட்டியலை பார்த்தால், எகிறியே நின்கின்றது.

இவ்வறான நிலையில், ஹட்டன்-டிக்கோயா நகரசபை அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் சில வீதி விளக்குகள் பகல் வேளையிலும் ஒளிர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாய் இருக்கின்றது.

இதனூடாக தங்களின் நிதியே நாசமாக்கப்படுகின்றது என்று மின் நுகர்வோர் புகார் தெரிவிக்கின்றனர். அதிகாரிகளின் அசமந்த போக்கினால், தாங்களும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குள் தள்ளப் பட்டுள்ளோம் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பகல் வேளைகளில் ஒளிரும் வீதி விளக்குகளில் பல விளக்குகள் இரவு நேரங்களில் ஒளிர்வதற்கு மறுத்துவிடுகின்றன. இது கள்வர்களுக்கும் ஏனைய குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கும். சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கும் வாய்ப்பாக அமைந்துள்ளது என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

sLT-MOBITEL 'BizLife' பக்கேஜ்களினூடாக உதவி

SLT-MOBITEL, நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களுக்கு (MSMEs) புத்தாக்கமான 'BizLife' வழங்கி, அவற்றின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

BizLife பக்கேஜ்களினூடாக, வியாபாரங்களுக்கு தமது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு அவசியமான சகல அம்சங்களையும் கொண்ட குரல்/டேட்டா தீர்வுகள் வழங்கப்படுகின்றது. BizLife இனால், செலவுச் சிக்கனமான தெரிவுகளை எதிர்நோக்கும் நிறுவனங்களுக்கு செலுத்தும் பணத்துக்கு சிறந்த பெறுமதியும் வழங்கப்பட்டு, சகாயமான விலையிடலின் பிரகாரம் அமைந்த தீர்வையும், அதிகரித்துச் செல்லும் டிஜிட்டல் பொருளாதாரத்தை அணுகுவதற்கு உதவியாகவும் அமைந்திருப்பதுடன், நிலைபேறான வளர்ச்சியை எய்தவும் ஏதுவாக அமைந்துள்ளது.

SLT-MOBITEL Enterprise இன் ஒப்பற்ற தொழில்நுட்பம், வளங்கள் மற்றும் தங்கியிருக்கும் சேவைகளுடன், Bizlife பக்கேஜ்கள் நான்கு விறுவிறுப்பான உள்ளம்சங்களான BizLife Mini, BizLife Mini Flash, BizLife Advance மற்றும் BizLife Advance Flash ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

சிறிய நடுத்தரளவு வியாபாரங்கள் மற்றும் நுண் வியாபாரங்களுக்கு முழு அளவிலான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கி, அவற்றுக்கு வெற்றிகரமான வகையில் வியாபாரச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவுவதற்காக வழங்கப்படும் BizLife Mini இல் 58GB anytime டேட்டா, Meet Light - ஒன்லைனில் பணியாற்றும் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் 30 GB டேட்டா, Messenger/WhatsApp பக்கேஜ் ஆகியவற்றுடன், 50 GB storage உடன் இலவச டேட்டா, அன்லிமிடெட் குரல் அழைப்புகள், 3 சாதனங்களுக்கான Kaspersky இணையப் பாதுகாப்பு, 25 பங்குபற்றுநர்கள் வரை premier SLT-MOBITEL LYNKED Video conferencing இனூடாக வீடியோ அழைப்பு வசதி மற்றும் SLT-MOBITEL இன் பிரத்தியேகமான BIZ mail வசதி 5GB உடன் வழங்கப்படுகின்றது.

BizLife Mini Flash இல், Messenger மற்றும் WhatsApp பக்கேஜ் அடங்கியுள்ளதுடன், நாளொன்றுக்கு 5 GB அன்லிமிடெட் டேட்டா அணுகல் மற்றும் அன்லிமிடெட் ஒன்லைன் பணியாற்றல், இலவச டேட்டா உடன் 50 GB storage, அன்லிமிடெட் குரல் அழைப்புகள், 3 சாதனங்களுக்கான Kaspersky இணையப் பாதுகாப்பு, 25 பங்குபற்றுநர்கள் வரை premier SLT-MOBITEL LYNKED Video conferencing இனூடாக வீடியோ அழைப்பு வசதி மற்றும் SLT-MOBITEL இன் பிரத்தியேகமான BIZ mail வசதி 5GB உடன் வழங்கப்படுகின்றது. BizLife Mini மற்றும் BizLife Mini Flash ஆகியன மாதாந்தம் ரூ. 4500 எனும் கட்டணத்தில் வழங்கப்படுகின்றது.

பாரியளவு வியாபாரங்களுக்கு, SLT-MOBITEL Enterprise இனால் BizLife Advance வழங்கப்படுகின்றது. இதில் 155GB அடங்கலாக எனிடைம் டேட்டா வசதி வழங்கப்படுகின்றது. Meet Light - 30 GB அடங்கலாக ஒன்லைன் பணியாற்றல் வசதி, Messenger/WhatsApp பக்கேஜ், ஆகியவற்றுடன், இலவச டேட்டா வசதிகளுடன் 100 GB storage வசதியும் வழங்கப்படுகின்றது. அன்லிமிடெட் குரல் அழைப்புகள், 3 சாதனங்களுக்கான Kaspersky இணையப் பாதுகாப்பு, 1000MB பகிரப்பட்ட Web Hosting கட்டமைப்பு மற்றும் வசதிகள், இலவச DNS hosting வசதி, Web builder தெரிவு, Static IP மற்றும் SLT-MOBITEL LYNKED Video conferencing இனூடாக 50 பங்குபற்றுநர்கள் வரை வீடியோ அழைப்பு வசதி போன்றன வழங்கப்படுகின்றன.

BizLife Advance Flash இனால் வியாபாரங்களுக்கு நாளாந்தம் 10 GB அன்லிமிடெட் டேட்டா அணுகல் வசதி வழங்கப்படுவதுடன், இதில் Messenger/WhatsApp பக்கேஜ் அடங்கியுள்ளது, 100 GB storage க்கு மேலதிகமாக அன்லிமிடெட் ஒன்லைன் பணியாற்றல், அன்லிமிடெட் குரல் அழைப்புகள், 3 சாதனங்களுக்கான Kaspersky இணையப் பாதுகாப்பு, 1000MB பகிரப்பட்ட Web Hosting கட்டமைப்பு மற்றும் வசதிகள், இலவச DNS hosting வசதி, Web builder தெரிவு, Static IP மற்றும் SLT-MOBITEL LYNKED Video conferencing இனூடாக 50 பங்குபற்றுநர்கள் வரை வீடியோ அழைப்பு வசதி போன்றன வழங்கப்படுகின்றன. BizLife Advance மற்றும் BizLife Advance Flash ஆகியவற்றை மாதாந்தம் ரூ. 10,000 எனும் கவர்ச்சிகரமான கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

SLT-MOBITEL ஃபைபர் வாடிக்கையாளர்களுக்கு

கடனட்டை தவணைக் கொடுப்பனவு வெகுமதிகள்

SLT-MOBITEL, சகல புதிய மற்றும் ஏற்கனவே காணப்படும் ஃபைபர் வாடிக்கையாளர்களுக்காக பிரத்தியேகமான கடனட்டை தவணைக் கொடுப்பனவு வெகுமதித் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த சலுகையின் அங்கமாக, விசேடமான டேட்டா பக்கேஜ்களினூடாக, விலைக் கழிவுகள் வழங்கப்படுவது மாத்திரமன்றி, வாடிக்கையாளர்களுக்கு மாதாந்த அடிப்படையில், அதிகளவு டேட்டாவை வழங்குவதுடன், தமது கடனட்டைகளினூடாக, தமது வங்கியின் பிரகாரம், வட்டியில்லாத தவணைமுறையில் மாதாந்தம் மீளச் செலுத்தும் வசதியும் வழங்கப்படுகின்றது.

இலங்கையில் நிலவும் பொருளாதார சூழ்நிலை, தொலைத்தொடர்பாடல் சந்தையை அதிகளவு போட்டிகரமானதாக திகழச் செய்துள்ளதுடன், செலவுகளைக் கட்டுப்படுத்தலின் முக்கியத்துவத்தை SLT-MOBITEL உணர்ந்து, வாடிக்கையாளர்களுக்கு சகாயமான தீர்வுகளை வழங்குகின்றது. அதன் பிரகாரம், நிறுவனத்தினால் ஃபைபர் ஹோம் இணைப்புகளுக்கு, இலங்கையின் முன்னணி வங்கிகளுடன் இணைந்து கடனட்டை கொடுப்பனவு வெகுமதிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

புதிய திட்டங்களில், புதிய

மற்றும் ஏற்கனவே காணப்படும் வாடிக்கையாளர்களுக்கு Triple Play மற்றும் Double Play பக்கேஜ்கள் அடங்கியுள்ளன. புதிய வாடிக்கையாளர்களுக்கு, Triple Play பக்கேஜில் புதிய இணைப்பு மற்றும் குரல், புரோட்பான்ட் மற்றும் PEOTV ஆகியன 12 மாதங்களுக்கு ரூ. 82,990 எனும் கட்டணத்தில் வழங்கப்படுகின்றது. புதிய வாடிக்கையாளர்களுக்கான Double Play BB பக்கேஜில், புதிய இணைப்பு மற்றும் குரல் மற்றும் புரோட்பான்ட் இணைப்பு 12 மாதங்களுக்கு ரூ. 54,960 க்கு வழங்கப்படுகின்றது. ஏற்கனவே காணப்படும் வாடிக்கையாளர்களுக்கு, Triple play பக்கேஜில், குரல், புரோட்பான்ட் மற்றும் PEOTV ஆகியன 12 மாதங்களுக்கு ரூ. 69,450 எனும் கட்டணத்தில் வழங்கப்படுகின்றது. Double Play பக்கேஜில், குரல் மற்றும் புரோட்பான்ட் ஆகியன 12 மாதங்களுக்கு ரூ. 41,420 க்கு வழங்கப்படுகின்றன.

அனைத்து ப்ளான்களும் மாதாந்த புரோட்பான்ட் கோட்டாவான 75GB anytime data மற்றும் 25GB YouTube ஆகியவற்றை கொண்டிருக்கும். வாடிக்கையாளர்களுக்கு அதே பக்கேஜை கொண்டிருக்கும் தெரிவு அல்லது வேறொரு கிடைக்கும் பக்கேஜுக்கு மாறும் வசதி வழங்கப்படுகின்றது.

தமது வாடிக்கையாளர்களுக்கு சகாயமான மற்றும் அணுகக்கூடிய சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதில் SLT-MOBITEL தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், ஃபைபர் வாடிக்கையாளர்களுக்கு புதிய கடனட்டை வெகுமதிகள் என்பது அந்த அர்ப்பணிப்புக்கு ஒரு உதாரணமாக அமைந்துள்ளது. அதிகளவு நெகிழ்ச்சி மற்றும் சௌகரியத்தை வழங்கும், மாதாந்த தவணைக் கட்டணங்களில் தமது ப்ளான்களுக்கு கட்டணம் செலுத்தும் கடனட்டை வசதியின் பயனை பெற்றுக் கொள்வதற்கு வாடிக்கையாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

SLT-MOBITEL இனால் Future Minds

கண்காட்சிக்கு வலுவூட்டல்

Future Minds உயர் கல்வி கண்காட்சிக்கு SLT-MOBITEL அனுசரணை வழங்கியிருந்தது. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) அண்மையில் இடம்பெற்ற இந்த கண்காட்சியில், SLT-MOBITEL இனால் இலவச SLT Wi-Fi வசதி வழங்கப்பட்டதுடன், எதிர்வரும் ஜுன் 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் கண்டி சிட்டி சென்ரர் மற்றும் காலியில் ஜுலை 1 மற்றும் 2ஆம் திகதிகளில் இடம்பெறும் நிகழ்வுகளிலும் இந்த இலவச SLT Wi-Fi வசதியை வழங்க முன்வந்துள்ளது.

நிகழ்வில் SLT-MOBITEL பிரசன்னத்தைக் கொண்டிருந்தமையினூடாக விருந்தினர்களுக்கு கண்காட்சிகளின் போது இணைப்பில் இருக்கவும், தடங்கலில்லாத இணைய பாவனையை மேற்கொள்ளவும் முடிந்தது. மேலும், SLT-MOBITEL இன் பயிற்சி பிரிவும், Future Minds இல் பங்கேற்று, சகல அறிவை மேம்படுத்த எதிர்பார்ப்போருக்கும் உயர் கல்வி வாய்ப்புகள் வழங்கியிருந்தது.

Future Minds என்பது மாணவர்களுக்கு தமது உயர் கல்வியை அணுகுவதில்

காணப்படும் இடைவெளியை நிவர்த்தி செய்து கொள்வதற்கு அதிகளவு தங்கியிருக்கக்கூடிய மற்றும் இனங்காணப்படக்கூடிய கட்டமைப்பாக அமைந்துள்ளது. சர்வதேச உயர் கல்வியை ஒன்றிணைக்கும் வகையில் Future Minds 2023 நிகழ்வு அமைந்திருப்பதுடன், "No One Left Behind" எனும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப்படுகின்றது. தொழில்நிலை ஆலோசனை வழங்கலில் முன்னோடியாக அமைந்திருப்பதுடன், நாட்டில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு கண்காட்சியுடனும் ஒப்பிடுகையில், அதிகளவான பார்வையாளர்களை கவரும் Future Minds கல்விசார் கண்காட்சி துறையில் 16 வருட கால சிறப்பைக் கொண்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு ஆராதனை

நாடளாவிய ரீதியில் உள்ள தேவாலயங்களில் உயிர்த்த ஞாயிறு விசேட ஆராதனைகள், சனிக்கிழமை (08) இரவும், ஞாயிற்றுக்கிழமையும் (09) இடம்பெற்றன.

மன்னாரில்

மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் சனிக்கிழமை (08) இரவு 11.15 மணிக்கு உயிர்த்த ஞாயிறு திருப்பலி இடம்பெற்றது.
மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்லியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.
(எஸ்.றொசேரியன் லெம்பேட்)

விசேட திருப்பலி

ஈஸ்டர் ஞாயிறை முன்னிட்டு மலையக பகுதிகளில் உள்ள தேவாலயங்களில் விசே திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது.

(மலையக நிருபர்கள்)

மட்டக்களப்பில்...

மட்டக்களப்பில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று (09) ஞாயிற்றுக்கிழமை உயிர்த்த ஞாயிறுத் தின ஆராதனைகள் இடம்பெற்றன. (கனகராசா சரவணன்)

நீலகிரி

பொம்மன் - பெள்ளி தம்பதியைச் சந்தித்த மோடி

பிரதமர் நரேந்திர மோடி பல்வேறு நலத்திட்ட உதவிகளை தொடங்கி வைப்பதற்காக நேற்றைய தினம் சென்னையை வந்தடைந்தார்.

அந்தவகையில் தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டம் முதுமலையில் தெப்பக்காடு யானைகள் முகாமிற்கு சென்ற மோடி அங்குள்ள யானைகளுக்கு உணவளித்தார்.

இதன்போது சமீபத்தில் ஒஸ்கர் விருது வென்ற 'தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்' ஆவணப்படத்தில் இடம்பெற்ற பொம்மன் - பெள்ளி தம்பதியை சந்தித்த மோடி அவர்களுடன் கலந்துரையாடினார்.

ஸ்பானிய லா லிகாத் தொடர்

வில்லாறியலிடம் தோற்ற றியல் மட்ரிட்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் வில்லாறியல் தோற்றது.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 71 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா உள்ளது. 59 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் றியல் மட்ரிட்டும், 54 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 51 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் றியல் சொஸைடட்டும் காணப்படுகின்றன. இதில் பார்சிலோனாவும், அத்லெட்டிகோ மட்ரிட்டும் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.

விருகம்பாக்கம்

தாயைக் கண்டித்த மகனுக்குக் கத்திக் குத்து

சென்னை விருகம்பாக்கத்தைச் சேர்ந்த 17 வயதான இளைஞன் ஒருவன் அங்குள்ள பாடசாலையொன்றில் 12 ஆம் தரத்தில் கல்வி கற்று வந்துள்ளான்.

குறித்த இளைஞனின் தாயார், கருத்து வேறுபாடு காரணமாக தனது கணவரை விட்டுப் பிரிந்து சிறிது காலம் தனியாக வசித்து வந்துள்ளார். இதன்போது அவருக்கும் கார்த்திக் என்ற 32 வயதான நபருக்கும் இடையில் காதல் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் அப்பெண் மீண்டும் குடும்ப சூழ்நிலை காரணமாக தனது கணவருடன் சேர்ந்து குடும்பம் நடத்தி வந்துள்ளார். எனினும் வீட்டில் யாரும் இல்லாத வேளைகளில் கார்த்திக்கை வரவழைத்து அவருடன் தனிமையில் பொழுதை போக்கிவந்துள்ளார்.

நாளடைவில் இவ்விவகாரம் குறித்துத் தெரியவரவே ஆத்திரம் அடைந்த குறித்த இளைஞன் தனது தாயுடனான தொடர்பை கைவிடும்படி கார்த்திக்கிடம் கூறியதுடன், இனிமேல் வீட்டுக்கு வரக்கூடாது எனவும் கண்டித்துள்ளான்.

அத்துடன் தனது தாயாரையும் கண்டித்துள்ளான். இதனால் ஆத்திரம் அடைந்த கார்த்திக்,குறித்த இளைஞனைக் கத்தியால் குத்தி விட்டுத் தப்பிச்சென்றுள்ளார்.

இதில் காயமடைந்த இளைஞன், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றான்.

அதேசமயம் கார்த்திக்கைக் கைதுசெய்த பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கேரளா

முகக்கவசம் கட்டாயம் இந்தியாவில் கட்டுக்குள்

இருந்த கொரோனாத் தொற்றுப் பரவலானது தற்போது மீண்டும் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக கேரளாவிலும் கொரோனாப் பரவலின் வேகம் அதிகரித்து வருகிறது. தொற்றை கட்டுப்படுத்த மாநில அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனிடையே அதிகரிக்கும் கொரோனாவைக் கருத்தில் கொண்டு கேரளாவில் கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் மற்றும் பிற நோய்கள் உள்ளவர்களுக்கு முகக்கவசம் அணிவது கட்டாயப்ப -டுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் வீணா ஜார்ஜ் தெரிவித்தார்.

ராஜஸ்தான்

தனிமையில் இருந்த பெண் எரித்துக் கொலை

தனிமையில் இருந்த பெண் ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு எரித்துக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் ராஜஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் பார்மர் மாவட்டத்தைச் சேர்ந்த 30 வயதான இரு பிள்ளைகளின் தாயே இவ்வாறு எரித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவ தினத்தன்று குறித்த பெண் தனது வீட்டில் தனிமையில் இருந்துள்ளார். இதனை சாதகமாகப் பயன்படுத்திய அப்பகுதியைச் சேர்ந்த சக்கூர் கான் என்பவர் அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்தார்.

பின்னர் அப்பெண்ணைப் பாலியல் வன்புணர்வு செய்துவிட்டு அவரை தீயிட்டு

ஐ.பி.எல்:

மும்பையை வீழ்த்திய சென்னை

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட மும்பை, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், இஷன் கிஷன் 32 (21), டிம் டேவிட் 31 (22), அணித்தலைவர் றோஹித் சர்மா 21 (13) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், இரவீந்திர ஜடேஜா 4-0-20-3, மிற்செல் சான்ட்னெர் 4-0-28-2, டுவைன் பிறிட்டோறியஸ் 4-0-28-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 158 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்னை, 18.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், அஜின்கியா ரஹானே 61 (27), ருத்துராஜ் கைகவாட் ஆட்டமிழக்காமல் 40 (36), ஷிவம் டுபே 28 (26), அம்பாதி ராயுடு ஆட்டமிழக்காமல் 20 (16) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், குமார் கார்த்திகேயா 4-0-24-1, ஜேஸன் பெஹ்றென்டோர்ப் 3-0-24-1, கமரொன் கிறீன் 3-0-20-0என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஜடேஜா தெரிவானார்.

இந்நிலையில், முன்னதாக கௌகாத்தியில் நடைபெற்ற டெல்லி கப்பிடடல்ஸுடனான போட்டியில்

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

வொல்வ்ஸிடம் தோற்ற செல்சி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற எவெர்ற்றனுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற போர்ண்மெத்துடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி தோற்றது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 72 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. 67 புள்ளிகளுடன் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி இரண்டாமிடத்திலும், 56 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும், அதே புள்ளிகளுடன் ஆனால் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் நான்காமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன.

பெண்களைக் கண்காணிக்கக் கெமராக்கள்

ஈரான்

ஈரானில் பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்அந்நாட்டில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை` எனக் கூறிக் கைது செய்யப்பட்ட 'மஹ்சா அமினி' என்ற யுவதி பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், ஈரான் அரசுக்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஹிஜாப் சட்டத்தை மீறும் பெண்களை கெமராக்கள் மூலம் கண்டறிந்து, அவர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் எச்சரிக்கை விடுக்கப்படும் என அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளமை அந்நாட்டு மக்கள் மத்தியில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. `

லண்டன்

ஈஸ்டர் முட்டைகள் அழிவின் விளிம்பில்

உள்ள `சுமத்ரா புலிகள், பாலைவன கீரிகள் மற்றும் அணில் குரங்குகள் (Squirrel monkeys) உள்ளிட்ட பல விலங்குகள் லண்டனிலுள்ள 'ZSL' உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு குறித்த விலங்குகளுக்கு உணவுகள் வைக்கப்பட்ட வண்ணமயமான ஈஸ்டர் முட்டைகளும் பொம்மைகளும் வழங்கப்பட்டன.

இந்நிலையில் முட்டைகளை உடைத்து அதற்குள் வைக்கப்பட்ட உணவுகளை விலங்குகள் உண்பதைக் காண ஏராளமான மக்கள் குறித்த உயிரியல் பூங்காவுக்கு வருகை

சவுதி

முதல் முறையாக அனுப்புகிறது சவுதி

சவுதி அரேபியா தனது முதல் பெண் விண்வெளி வீராங்கனையான ரய்யனா பர்னாவி என்பவரை அடுத்த மாதம் விண்வெளிக்கு அனுப்பவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சவுதியைச் சேர்ந்த பர்னாவி மற்றும் அலி அல்-கர்னி ஆகியோர் அமெரிக்காவின் புளோரிடாவிலிருந்து சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு செல்ல உள்ளதாகக் குறிப்பிட்டனர்.

10 நாட்கள் சர்வதேச விண்வெளி மையத்தில் இருப்பார்கள்.

வாகரை கட்டுமுறிவுக்குளம் அ.த.க பாடசாலையின்

விளையாட்டு நிகழ்வில் மருதம் இல்லம் முதலிடம்

ஆர். ஜெயஸ்ரீராம்

கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட வாகரை கட்டுமுறிவுக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு விளையாட்டு நிகழ்வில் மருதம் இல்லம் முதலாமிடத்தைப் பெற்றது.

இவ்விளையாடு நிகழ்வின்போது மாகாண மட்டத்தில் கால்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தைப்பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவான மாணவர்கள் பாராட்டப்பட்டு சான்றிதழ்களும், வெற்றிச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 10 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.